பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 17 சனிக்கிழமை 03.10.2020 கதிர் 197

## எதிரணி உறுப்பினர்கள் ஐந்து பேர் அரச தரப்புக்கு?

கொழும்பு, ஒக்.03

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஐவர் அரசுடன் சங்கமிக்கவுள்ளனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

'20' ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்த பின்னர் அவர்கள் அரசுடன் இணைவார்கள் என தகவல் வெளியாகியுள்ளது.

2

# '20' தற்காலிக ஏற்பாடுதான் பின்னரே புதிய அரசமைப்பு!

## அமைச்சர் பிரசன்ன அதிரடிக் கருத்து



கொழும்பு, ஒக்ரோபர் 03

20ஆவது திருத்தச்சட்டமூலம் நிறைவேறிய பின்னர் நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் இன்று சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாக ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2

## 2 மணித்தியாலத்துக்கு ஒரு குழந்தை மீது இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகமாம்

கொழும்பு, ஒக்.03

இந்நாட்டில் ஒவ்வொரு இரண்டு மணித்தியாலங்களுக்கும் ஒரு குழந்தை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதாக பிரதி பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

உங்களால் நம்ப முடியாத விடயம் ஒன்றை கூறுகிறேன். இந்த தீவில் ஒவ்வொரு இரண்டு மணித்தியாலங்களுக்கும் ஒரு குழந்தை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது. இன்று இந்த நிகழ்வு 4 மணித்தியாலங்கள் இடம்பெறும். இந்த 4 மணித்தியாலங்களில் நாட்டில் எங்காவது இடங்களில் இரண்டு குழந்தைகள் கடுமையாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். - என்றார்.

## வேலைவாய்ப்பின்மையால் நாட்டில் இளைஞர்கள் தற்கொலை முயற்சி!

கொழும்பு,ஒக்.03

இலங்கையில் வேலைவாய்ப்பின்மை மற்றும் பொருளாதார சிக்கல் காரணமாக இளைஞர்கள் பலர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர் எனத் தெரியவந்துள்ளது.

உளரீதியாக பாதிக்கப்படும் அவர்கள் வாழ்க்கை போராட்டத்துக்கு முகம் கொடுப்பதற்கு பதிலாக தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்ப்பதற்குத் தீர்மானிக்கின்றனர்.

இலங்கையில் இளைஞர்களே அதிகளவில் பொருளதாரம் மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சினைக்கு முகம்கொடுக்கின்றனர் என 'சுமித்ரயோ' என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 779 பேர் தற்கொலை

2

## குளக்கரையில் பூசகர் சடலமாக மீட்கப்பட்டார்!

புங்குடுதீவில் பூசகர் ஒருவர் குளக் கரையில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

அவரை அடித்துக் கொலை செய்துவிட்டு சடலத்தை அங்கு கொண்டுவந்து போட்டிருக்கலாம் என நம்பப்படுவதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஊரதீவு சிவன் ஆலய குளக்கரையிலேயே அவரது சடலம் இன்று (சனிக்கிழமை) அதிகாலை கண்டறியப்பட்டது என்று பொலிஸார தெரிவித்துள்ளனர்.

2

## 902 கிலோ மஞ்சளுடன் இரண்டு பேர் கைது!


மன்னார், ஒக்.03

மன்னார் - தாழ்வுப்பாடு பகுதியில் இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக கொண்டு வரப்பட்ட 902 கிலோ மஞ்சளுடன், இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில், கடற்படையினர் நேற்றைய தினம் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

2

## ரூ.15 கோடிக்கும் அதிக பெறுமதி ஹெரோயினுடன் 7 பேர் சிக்கினர்



15 கோடி ரூபாவுக்கும்அதிகபெறுமதியுடைய 15 கிலோ கிராம்ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, 7 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் - தங்கொழுவ கொஸ்வத்த பகுதியில் போதைப்பொருள் தடுப்பு பிரிவினருக்கு

2

## '20' ஐ எதிர்ப்பதற்கு மனோ அணி முடிவு!

கொழும்பு, ஒக்.03

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.


முற்போக்கு கூட்டணியின் அரசியல் உயர்பீடம் இவ்வாரம் கூடி இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிடும் எனவும் தெரியவருகின்றது.

20 ஆவது திருத்தச்சட்ட வரைவில் ஜனநாயகத்துக்கு விரோதமான அம்சங்கள் இருப்பதாலேயே அதனை எதிர்த்து வாக்களிப்பதற்கும், 20 இற்கு எதிராக முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவை வழங்குவதற்கும் கூட்டணி தீர்மானித்துள்ளது.

20 ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது

2

## கோணேஸ்வரர் ஆலயத்திலிருந்து விழுந்து நபரொருவர் உயிரிழப்பு



திருகோணமலைகோணேஸ்வரர் ஆலயச் சுற்றாடலில் விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.


உவர்மலைப் பகுதியைச் சேர்ந்த ஏ.செந்தூரன் (38 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள் ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த நபர்

2

## மாட்டிறைச்சி இறக்குமதி பொய்யான ஒரு தகவல்!

### மறுக்கிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஒக்.03

அமைச்சரவை ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து நாட்டுக்கு மாட்டிறைச்சி இறக்குமதி செய்ய விமான நிலையப் பணிப்பாளரும் நாமல் எம்.பியின் மாமாவுமான திலக் வீரசிங்கவுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று வெளியான செய்திகளை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

தடையைத் தொடர்ந்து, வீரசிங்க இப்போது நாட்டுக்கு மாட்டிறைச்சி இறக்குமதி செய்யத் தயாராகி வருவதாக வதந்திகள் நேற்று

2

## சஜித்துடன் பேசவுள்ள ஐ.தே.க. பிரமுகர்கள்

கொழும்பு, ஒக்.03

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலருக்குமிடையில் விரைவில் சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

ஐ.தே.கவின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த ருவான் விஜேவர்தனவுக்கு தொலைபேசி ஊடாக சஜித் வாழ்த்து தெரிவித்தபோது, நேரடிச் சந்திப்புக்கான அழைப்பை ருவான் விடுத்திருந்தார் எனவும், இதன் பிரகாரமே மேற்படி சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சஜித் தலைமையில் உதயமாகவுள்ள 'ஐக்கிய கூட்டமைப்பில்' இணைந்து செயற்படுவது சம்பந்தமாகவும், மாகாணத் தேர்தலை கூட்டாக எதிர்கொள்வது பற்றியும் இதன்போது அவதானம் செலுத்தப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ‘20’ ஐ எதிர்ப்பதற்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும், வாக்கெடுப்பின்போது சிலர் நிடுநிலை வகிக்கவுள்ளனர் எனவும் வெளியாகியுள்ள தகவல்களை கூட்டணியின் உறுப்பினர் ஒருவர் நிராகரித்தார்.

## மாட்டிறைச்சி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக ஊடகங்களில் வெளியாகின.

ஆயினும், இந்தச் செய்திகள் தனது குடும்பத்துக்கு எதிரான தனிப்பட்ட தாக்குதல் என்றும் தனது குடும்பத்தில் யாரும் இறைச்சி இறக்குமதியில் ஈடுபடவில்லை என்றும் நாமல் மறுப்பு தெரிவித்துள்ளார்.

மேலும் தனது குடும்பத்திற்கு எதிராக மக்கள் தவறான குற்றச்சாட்டுகளை பரப்புவதைப் பார்க்கும்போது வருத்தமாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

## கோணேஸ்வரர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் சென்ற நிலையில் கோணேஸ்வரர் ஆலயத்தில் இருந்து கற்பாறையில் விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார் என தெரியவருகிறது.

அவரது சடலம் காலையில் கற்பாறை அருகில் வைக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரூ.15 கோடிக்கும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக் கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய குறித்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அப்போதே இந்தளவு ஹெரோயின் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு, 7 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கூறப்பட்டது.

## வேலைவாய்ப்பின்மையால் நாட்டில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துக்கொண்டுள்ளனர். அவர்களில் 635 இளைஞர்கள் என்பதுடன், 144 பேர் யுவதிகள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாதுகாப்பற்ற வேலை, குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தவறுதல், கடன்பெறுதல் போன்ற காரணங்களினால் உளரீதியாக பாதிக்கப்படும் இளைஞர், யுவதிகள் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணிக்கை உயர்மட்டத்தில் இருப்பதாக ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் குடும்ப வன்முறைகளினால் அதிக பாதிப்புகளை எதிர்கொள்ளும் பல பெண்கள் மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர்.

இதேவேளை, தற்கொலைசெய்துகொள்பவர்களில் பெரும்பான்மையானோர் அனுராதபுரம், வவுனியா, மொனராகலை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என ‘சுமித்ரயோ’ அமைப்பு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் மற்றும் வேலைப்பளுமிக்க வாழ்க்கைக்கு மத்தியில் ஒருவருக்கொருவர் காண்பிக்கும் அக்கறை, அவதானம், புரிந்துணர்வு குறைவடைந்து செல்வதாலும் இந்தத் துர்பாக்கிய நிலை சிலருக் ஏற்படுவதாக தேசிய மனநல சுகாதார ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குளக்கரையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புங்குடுதீவு ஊரதீவுச் சிவன் கோவில் பூசகர் ரூபன் சர்மா என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 902 கிலோ மஞ்ச.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார், புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த 22 மற்றும் 48 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள மஞ்சள், சுங்க அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன், கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள் தோடு, தனிமைபடுத்தல் நிறைவடைந்ததன் பின்னர் அவர்கள் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக் கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ‘20’ தற்காலிக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பொன்றை உருவாக்குவதற்காகவே எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை மக்கள் வழங்கினர். எனவே, அதனை நிச்சயம் செய்வோம். அதற்கு முன்னர் தற்காலிக ஏற்பாடாக 20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படும்.

ஏனெனில், 19ஆவது திருத்தச் சட்டத்தால் இந்த நாடு அழிவை நோக்கிப் பயணித்தது. ஜனாதிபதி மற்றும் பிரதமரால் இணைந்து செயற்படமுடியாத நிலை ஏற்பட்டது. சுயாதீனம் என்ற போர்வையில் பழிவாங்கல்களுக்காக ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன.

அதாவது, ‘தங்கையைக் காண்பித்து அக்காவை மணம் முடித்துவைப்பது போல’ 19 ஊடாக நடவடிக்கைகள் இடம்பெற்றன. இவை, 20 ஊடாக நீக்கப்படும்.

ஜனாதிபதிக்கு தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் நான்கு வருடங்களே இருக்கின்றன. இக்காலப் பகுதியில் நாட்டுக்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதேவேளை, ஆளுங்கட்சி வசம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ளது. எனவே, எவரிடமும் சென்று ஆதரவு தேடவேண்டிய அவசியம் இல்லை. வெளியில் இருந்து சிலர் வந்து இணைந்தாலும் எமக்குப் பிரச்சினையில்லை – என்றார்.

## தேர்தல் சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுக்க சுதந்திரக் கட்சி தீர்மானம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி புதிய அரசமைப்பின் மூலம் தேர்தல் சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுக்க உள்ளது.

இதற்காக அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை ஆதரிக்கவும் கட்சி முடிவு செய்துள்ளதாக கட்சியின் மூத்த வட்டார செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பாக சில கவலைகள் இருக்கின்றன என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னர் அறிவித்திருந்தது.

அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டுள்ள கவலைகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் விவாதிக்கும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து அரசமைப்பில் முன்மொழியப்பட்ட 20 ஆவது திருத்தத்தை ஆய்வுசெய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒரு குழுவையும் நியமித்தது.

அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா தலையிலான 10 உறுப்பினர்கள் கொண்ட இந்தக் குழு, 20 ஆவது திருத்தம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நியமித்த குழுவுக்கு ஆய்வு செய்து பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்தப் பரிந்துரைகளுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தல் சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுக்க உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## எதிரணி உறுப்பினர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ நேரில் களமிறங்கியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புலம்பெயர்ந்தோர் புலிகளா?

'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீது' என் பார்கள்.

அது போல இலங்கையில், தென்னிலங்கையின் அரசியல் தரப்புகள் இடையே என்ன முரண்பாடு, கருத்து வேறுபாடு, போட்டி ஏற்பட்டாலும் விவகாரத்தை இனவாதமாக்கித் தமிழர் தலை மீதுதான் சுமத்துவார்கள்.

நாய்க்குக் கல்லெறி எங்கு பட்டாலும் அது காலைத் தூக்கியபடி நொண்டிக் கொண்டு ஓடுமாம்.

அது மாதிரி தென்னிலங்கை அரசியல் பிரச்சினைகள் எல்லாம் கடைசியில் சிறுபான்மையினரின் – குறிப்பாகத் தமிழர்களின் – தலை மீது சுமத்தி, இனவாதமாக்கி முன்னெடுக்கப்படுவதுதான் வழமை.

அந்த அரசியல் சின்னத்தனத்துக்கு எந்தப் பெரும்பான்மைக் கட்சியும் விதிவிலக்கல்ல என்பதுதான் நமது நீண்ட காலப் பட்டறிவு.

வடக்கிலும், கிழக்கிலும் தீவிரவாதம் வளர்ந்து விடும் என எச்சரிக்கும் ஆளும் தரப்பு அதைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிக அதிகாரம் வேண்டும், அதனால் இருபதாவது திருத்தம் கட்டாயம் என்கின்றது.

பிரதான எதிரணியும் தன் பங்குக்கு இவ்விடயத்தில் தமிழர்களை – புலிகளை – இழுக்காமல் தவிர்க்கவில்லை.

இருபதாவது திருத்தம் வந்தால் நாடாளுமன்றுக்குப் புலிகளும் வந்து விடுவார்கள் என்று மக்கள் ஐக்கிய சக்தி இப்போது வியாக்கியானம் கூற முற்பட்டிருக்கின்றது.

இந்த மக்கள் ஐக்கிய சக்தி தரப்பு பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் –ஐக்கிய தேசிய முன்னணியில் – இருந்தது. அந்த முன்னணி அரசு நான்கரை ஆண்டுகள் தாக்குப் பிடித்து நிற்பதற்கு முண்டு கொடுத்தது தமிழர் தரப்பு. தமிழரின் ஆதரவில் – முண்டில் – நாலரை ஆண்டுகள் ஆட்சி நடத்திய தென்னிலங்கை சிங்களத் தரப்பு, இப்போது புலம்பெயர் தமிழர்களைப் புலிகளாக அடையாளம் காட்ட முயற்சிக்கின்றது என்பது அவதானிக்கப்பட வேண்டியது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்காக தீர்வு பல அடிப்படை அம்சங்களைக் கொண்டது. வெறுமனே அதிகாரப் பரவலாக்கல், சுயாட்சி, இழப்பீடுகள், மீள நிகழாமையை உறுதிப் படுத்தல் என்பவை மட்டுமல்லாமல், அதையும் தாண்டி இன்னொரு முக்கியமான ஓர் அம்சம் உள்ளது.

அது, இந்தப் பேரினவாத அடக்குமுறைகளாலும், அட்டகாசங்களினாலும், அதனால் வெடித்த கொடூர யுத்தத்தினாலும் இலங்கையை விட்டு வேரோடும், வேரடி மண்ணோடும், தூக்கி யெறியப்பட்டு, பூமிப் பந்து எங்ஙனும் பரந்து விழுந்து, காலூன்றி நிற்கும் புலம்பெயர் தமிழர்கள் மீண்டும் நாட்டுக்குத் திரும்புவதற்கான உரிமை (Right to return) ஆகும்.

புலம்பெயர் தமிழர்களின் நாட்டுக்குத் திரும்புவதற்கான உரிமையை ஏற்று, அங்கீகரித்து, நடைமுறைப்படுத்த வழி செய்யாத எந்தத் தீர்வும், நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய நிரந்தரத் தீர்வாக அமையமாட்டாது என்பது நிச்சயம்.

இடம்பெயர்ந்தோர் மீளக் குடியமர்வது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமான விவகாரம் புலம்பெயர் மக்கள் நாட்டுக்குத் திரும்புவதற்கான நடவடிக்கையாகும்.

அதன் ஓர் ஆரம்ப கட்டம்தான் – அல்லது முதலாம் நிலைப்படிதான் – இடம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் தஞ்சம் புகுந்து, அந்தந்த நாடுகளின் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொண்டு, ஆங்காங்கே வசித்து வரும் பல லட்சம் புலம்பெயர் தமிழர்கள் மீண்டும் இரண்டாவது நிலைப் பிரஜாவுரிமையை இலங்கையில் பெற்றுக் கொள்வதாகும்.

இந்த வகையில் இரட்டைப் பிரஜாவுரிமை பெறுவதற்குப் புலம்பெயர் தமிழர்கள் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் பரிவோடும், விரைந்தும், சாதகமாகவும் பரிசீலிக்கப்படுவது இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் முக்கிய அம்சம் பெறுகின்றது.

புலம்பெயர் தமிழர்களை அரவணைத்து, நாட்டுக்குள் கொண்டு வந்து, மீண்டும் முழுமையாக இலங்கைத் தீவின் பிரஜைகளாக்குவது இனப் பிரச்சினைத் தீர்வுக்கு மாத்திரமன்றி, இப்போது அதலபாதாளத்தில் விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பித் தூக்கி நிறுத்தவும் அத்தியாவசியமானதாகும்.

அந்த வகையில், புலம்பெயர் தமிழர்களை இந்த நாட்டின் பிரிக்க முடியாத அங்கமாக ஒன்றிணைப்பதை விடுத்து, தமது அரசியலுக்காகப் புலிச்சாயம் பூசிப் பிரித்து வைப்பது முட்டாள்தனமானது என்பதைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

இருபதாவது திருத்தத்தைக் கொண்டு வரவும், அதை எதிர்க்கவும், தங்கள் தங்களுக்குப் பிடித்தமான எந்த விளக்கத்தையும் – வியாக்கியானத்தையும் – சிங்கள அரசியல்வாதிகள் பேசட்டும். அது அவர்கள் முடிவு. ஆனால் அதற்காகத் தேவையில்லாமல் புலம்பெயர் தமிழர்களுக்குப் புலிச்சாயம் பூசக் கூடாது. இருபதாவது திருத்தம் நிறைவேறினால் சுவிஸ்சர்லாந்தில் இருக்கும் புலிகள் நாடாளுமன்றுக்கு வந்து விடுவார்கள் என்ற சாரப்பட புலம்பெயர் தமிழர்களை இழுத்து, இம்சைப்படுத்துவதைத் தென்னிலங்கைக் கட்சிகள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

## நாடாளுமன்ற முதல் மாத அமர்வில் சிறப்பாகச் செயற்பட்ட உறுப்பினர்கள்!

புதிய நாடாளுமன்றச் செயல்பாடுகளின் அடிப்படையிலான தரப்படுத்தல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாடாளுமன்றத்திலும் அவர்களின் செயல்பாடுகள் மற்றும் உரைகள் தொடர்பில் இந்த தரப்படுத்தலில் அதிகம் அவதானிக்கப்படும்.

குறிப்பாக நாடாளுமன்றத்தில் நடக்கும் விவாதங்கள், வரவு, உரையாற்றுவது உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்திறனை www.manthri.lk இணையம் தரப்படுத்துவது வழக்கம்.

இந்நிலையில், புதிதாக தெரிவான நாடாளுமன்றத்தின் முதல் மாத செயற்பாட்டின் அடிப்படையில் உறுப்பினர்கள் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த தரப்படுத்தலின்படி, முதல் 5 இடங்களில், அநுர குமார திஸநாயக்க, சஜித் பிரேமதாஸ, பந்துல குணவர்தன, தினேஷ் குணவர்தன, ஹர் டி சில்வா ஆகியோர் தரப்படுத்தப்பட்டுள்ளனர்.

## யாழ்.மாணவிக்கு கிடைத்தது ஜின்னா புலமைப் பரிசில்!







ஸ்ரீலங்காவின் க.பொ.த சாதாரண மற்றும் உயர்தரப்பரீட்சைகளில் தமது திறமையை வெளிப்படுத்திய 304 மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசில் உதவி பாகிஸ்தானிய தூதரகத்தால் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவில் க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தரப்பரீட்சைகளில் தமது திறமையை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு கடந்த 2006 இல் பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகரகத்தால் வருடாந்தம் முகமது அலி ஜின்னாவின் பெயரில் 'ஜின்னா புலமைப்பரிசில்' உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடந்த 2019 ஆம் ஆண்டு சாதாரண மற்றும் உயர்தரப்பரீட்சைகளில் திறம்பட செயற்பட்ட மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகரகத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த 'ஜின்னா புலமைப்பரிசில்' யாழ்ப்பாணம் வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த செல்வி அபர்ணா கருணாகரன் தகுதிபெற்றுள்ளார்.

இவர் கடந்த வருடம் 2019ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் தோற்றி முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றிருந்தார்.

இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் முகமட் சாத் கட்டாகின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, கல்வி மறுசீரமைப்பு மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் பங்கேற்க பிள்ளையானுக்கு நீதிமன்ற அனுமதி தேவை!

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் தலைவரான பிள்ளையானுக்கு கூட்டத்தில் கலந்துகொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதன்படி இவர் அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள நீதிமன்றத்தின் அனுமதி தேவைப்படுகின்றது.

தற்போது காவலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பிள்ளையான் நீதிமன்ற உத்தரவு இல்லாமல் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என சிறைச்சாலை ஆணையர் சந்தன ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் கடந்த ஓகஸ்ட் 10 ஆம் திகதி நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியை பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பப் பெண் சாவு!

கரும்பு செய்கையை மிருகங்களிலிருந்து பாதுகாக்கப் புதைக்கப்பட்ட கட்டுத் துவக்கு தவறுதலாக வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சியம்பலாண்டுவ புறநகர் பிரதேசமான ஹெலமுல்ல பிரதேசத்தில் கரும்பு தோட்டத்தை காட்டு மிருகங்களிடமிருந்து பாதுகாப்பதற்காக கரும்புத் தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு தவறுதலாக காலில் மிதிபட்டு வெடித்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சியம்பலாண்டுவ, ஹெலமுல்ல பகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.பிரேமாவதி (வயது - 52)எனும் நான்கு பிள்ளைகளின் தாயாவார்.

அதேவேளை இறந்தவரின் கணவர் இதற்கு முன்னரும் இவ்வாறு சட்டவிரோத கட்டுத்துவக்கு பயன்படுத்தியதில் கால் பாதத்தை இழந்தவர் எனத் தெரியவந்துள்ளது. சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 371 இலங்கையர் நாடு திரும்பினர்!

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் இந்தியாவில் தங்கியிருந்த 371 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் இன்று (சனிக்கிழமை) அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பணிக்கு சென்றிருந்த 362 இலங்கையர்களும், இந்தியாவிலிருந்து 09 இலங்கையர்களும் நாட்டை வந்தடைந்தனர்.

அனைத்துப் பயணிகளும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டமையுடன், தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# உலகிலேயே நீளமான சுரங்கப் பாதையை திறந்து வைத்தார் பிரதமர் நரேந்திர மோடி!








இமாசல பிரதேசத்தில் உலகிலேயே நீளமான சுரங்கப்பாதையை பிரதமர் நரேந்திர மோடி இன்று (சனிக்கிழமை) திறந்து வைத்தார்;.

இமாசல பிரதேச மாநிலம் மணாலியில் இருந்து லஹால் – ஸ்பிடி பள்ளத்தாக்கு செல்லும் சாலை, பனிக் காலத்தில் கடுமையான பனிச்சரிவால் மூடப்பட்டு விடும். இதனால் லஹால் – ஸ்பிடி பள்ளத்தாக்கு, ஆண்டுக்கு 6 மாதங்கள் பிற பகுதிகளில் இருந்து துண்டிக்கப்படும்.

இதனைக் கருத்தில்கொண்டு, மணாலி – லஹால் ஸ்பிடி பள்ளத்தாக்கை இணைக்க ரோதங் என்ற இடத்தில் சுரங்கப்பாதை கட்ட, கடந்த 2000ஆம் ஆண்டு ஜுன் 3 ஆம் திகதி அப்போதைய வாஜ்பாய் அரசு முடிவு செய்தது.

மேலும், குறித்த ரோதங் சுரங்கப்பாதைக்கு, வாஜ்பாய் நினைவாக 'அடல் சுரங்கப்பாதை' என்று பெயர் சூட்ட கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் மோடி அரசு முடிவு செய்தது. எல்லை சாலை அமைப்பு தொடர்ந்து போராடி சுரங்கப்பாதை பணிகளை நிறைவு செய்துள்ளது.

இது உலகிலேயே மிக நீளமான நெடுஞ்சாலை சுரங்கப்பாதை ஆகும். 9.02 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளது. இந்த சுரங்கப்பாதை ஊடாக எல்லா வானிலை காலத்திலும், மணாலியில் இருந்து லஹால் – ஸ்பிடி பள்ளத்தாக்குக்குச் செல்லலாம். கடல் மட்டத்தில் இருந்து 3 ஆயிரம் மீற்றர் உயரத்தில், அதிநவீன வசதிகளுடன் இது கட்டப்பட்டுள்ளது.

இது இருவழி சுரங்கப்பாதை ஆகும். நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் கார்களும், 1,500 சரக்கு வாகனங்களும் செல்லும்வகையில் சுரங்கப்பாதை கட்டப்பட்டுள்ளது. மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் செல்லலாம்.

இத்தகைய சிறப்புகள் கொண்ட குறித்த சுரங்கப் பாதையை பிரதமர் மோடி இன்று (சனிக்கிழமை) திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது

## படகில் சமையல் சிலிண்டர் வெடித்து பாரிய தீ விபத்து!

தூத்துக்குடி மாவட்டம் – தருவைகுளத்தில் கடலோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசைப்படகில் சமையல் சிலிண்டர் வெடித்து பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

அந்தோனிராஜ் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில், மீனவர்கள் சமையல் செய்து கொண்டிருந்துள்ளனர். இதன்போது எதிர்பாராத விதமாக சிலிண்டர் வெடித்து படகில் தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், ஏனைய படகுகளுக்குத் தீ பரவாமல் தடுக்க, தீ பிடித்த படகை இயக்கி கடலுக்குள் மீனவர்கள் தள்ளியுள்ளனர்.

இருப்பினும், காற்றின் வேகத்தில் மளமள வென பரவிய தீ, அருகே ஐஸ் கட்டி இறக்குவதற்காக நின்று கொண்டிருந்த லாரி மீதும் பற்றியது.

அதனைத் தொடர்ந்து தகவல் அறிந்து அந்த இடத்துக்கு விரைந்த தீயணைப்பு துறையினர், வெகு நேரம் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

எனினும் படகின் பெரும்பகுதி தீயில் கருகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கன்னியாகுமரியில் கடல் உள்வாங்கியதால் பரபரப்பு!

### அச்சத்தில் மீனவர்கள்



கன்னியாகுமரியில் 50 அடி தூரத்துக்கு திடீரென கடல் உள்வாங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. இதனால் மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 6 மணியளவில், கடல் 2 ஆவது நாளாக மீண்டும் உள்வாங்கத் தொடங்கி, நேரம் செல்ல செல்ல கடல் நீர் சுமார் 50 அடி தூரத்துக்கு உள்ளே சென்றதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் கடலுக்கு அடியில் இருந்த ராட்சத பாறைகள், மணல் திட்டுகள், மணல் பரப்புகள் வெளியே தெரியத் தொடங்கின. அத்துடன் கடலுக்குள் இருந்த விவேகானந்தர் மண்டபம், திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறைகள் திடல் போல் காட்சியளித்தது. இதை பார்த்த மீனவர்கள் ஒருவித அச்சத்துடனும் பீதியுடனும் காணப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, விடிய விடிய அதே நிலைமை நீடித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்கு முன்பு 200 ஆம் ஆண்டு சுனாமி ஏற்படுவதற்கு சில மணி நேரத்துக்கு முன் கன்னியாகுமரி கடல் இதுபோல் உள்வாங்கியது. தற்போதும் அதேபோல் கடல் உள்வாங்கியதால் கடற்கரையோர மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால், அவர்கள் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்துள்ளனர்.

பொதுவாக கன்னியாகுமரி கடல் அடிக்கடி பகல் நேரங்களில் மட்டுமே அவ்வப்போது சில அடிதூரம் மட்டுமே உள்வாங்கி வந்தது. தற்போது கடந்த 2 நாள்களாக இரவு நேரங்களில் கடல் உள்வாங்கும் சம்பவம் நடைபெறுவது, மீனவர்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக கன்னியாகுமரி பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளவை வருமாறு –

'கன்னியாகுமரி பகுதியில் பகல் நேரத்தில் கடல் உள்வாங்குவதைப் பார்த்து இருக்கிறோம். இரவு நேரங்களில் கடல் உள்வாங்கியதை இப்போதுதான் நாங்கள் பார்க்கிறோம். தொடர்ந்து 2 நாள்;களாக இரவு நேரங்களில் கடல் உள்வாங்கி இருப்பது எங்களுக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. –எனக் குறிப்பிட்டுள்ளனர்.

## இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 79 ஆயிரத்து 476 பேருக்குக் கொரோனா!

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 79 ஆயிரத்து 476 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 24 மணி நேரத்தில் 1,069 பேர் இந்தியாவில் உயிரிழந்துள்ளனர் எனவும் இந்தியாவில் இதுவரை கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை ஒரு லட்சத்து 842 ஆக உயர்ந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்புடன் 9 லட்சத்து 44 ஆயிரத்து 996 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தியாவில் இதுவரை கொரோனா உறுதி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 64 லட்சத்து 73 ஆயிரமாக உள்ளது.

அத்துடன் தொற்றில் இருந்து குணமடைந்து வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கை 54 லட்சத்து 27 ஆயிரமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கு விமான உதிரிப்பாகங்களை விற்பதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளிப்பு!



இராணுவ விமானத்தின் உதிரி பாகங்கள் உள்ளிட்ட 660 கோடி ரூபா மதிப்பிலான உபகரணங்களை, இந்தியாவிற்கு விற்பனை செய்ய, அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பென்டகன்' ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் சரக்கு போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும், சி., 130 ஜே. என்ற விமானத்தின் உதிரி பாகங்கள், பழுதுபார்க்கும் சாதனங்கள், தரைதளத்தில் உபயோகிக்கப்படும் உபகரணங்கள், ஜி.பி.எஸ். அமைப்பு உள்ளிட்ட பல உதிரி பாகங்களை, அமெரிக்காவிடம் இந்தியா கோரி இருந்தது.

ஆய்வக உபகரணங்கள், மென்பொருள், தொழில்நுட்ப ஆவணங்கள், பணியாளர்கள் பயிற்சி மற்றும் பயிற்சி உபகரணங்கள் என 660 கோடி ரூபா மதிப்பிலான பொருள்களும் கோரப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே இந்த அனைத்துப் பொருள்களையும் இந்தியாவிற்கு விற்பனை செய்ய, அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பென்டகன்' நேற்று (வெள்ளிக்கிழமை) அனுமதி வழங்கியது.

இந்த விடயம் தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு பென்டகன் சார்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஒப்புதல் கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு–

இந்தியா தரப்பில் கோரப்பட்ட அனைத்துப் பொருள்களையும் வழங்க ஒப்புதல் அளிக்கிறோம். இந்த விற்பனை, வெளியுறவுக் கொள்கை மற்றும் அமெரிக்க தேசிய பாதுகாப்புக்கும் ஆதரவாக இருக்கும்.

அமெரிக்கா – இந்தியா இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும். இந்தியாவின் இராணுவப் பலத்தை அதிகரிக்கும்.

தெற்காசியா மற்றும் இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் அரசியல் ஸ்திரத்தன்மை, அமைதி மற்றும் பொருளாதார வளர்ச்சி உள்ளிட்டவற்றிற்கு இது முக்கிய

# கொரோனாவால் பாதிக்கப்பட்ட ட்ரம்ப் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்!



கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்றால் பாதிக்கப்பட்ட, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வால்டர் ரீட் தேசிய இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு நேர்மறையானதை பரிசோதித்த 16 மணி நேரத்திற்கு பிறகு, பொதுவெளியில் தோன்றிய ட்ரம்ப், நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 6:16 மணிக்கு வெள்ளை மாளிகையிலிருந்து ஹெலிகொப்டரில் வைத்தியசாலைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நீல நிற உடை, இருண்ட முகக்கவசம் அணிந்திருந்த ட்ரம்ப், ஊடகங்களுக்கு கை அசைத்தவாறு ஹெலிகொப்டரில் ஏறினார். அவருடன் தலைமை அதிகாரி மார்க் மெடோஸும் முகக்கவசம் அணிந்து பின்தொடர்ந்தார்.

ட்ரம்ப் சிறிது நேரத்திற்குப் பிறகு வைத்தியசாலையில் இறங்கினார். வைத்தியசாலையின் பிரதான கட்டடத்திற்கு விரைவாக சவாரி செய்வதற்காக, தனது லிமோசினில் ஏறும் முன் தனது இராணுவ உதவியாளர்களுக்கு வணக்கம் தெரிவித்தார்.

அதேவேளை கொவிட் – 19 தொற்றால் பாதிக்கப்பட்ட, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சிலநாள்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ட்ரம்பின் நெருங்கிய ஆலோசகரான 31வயதான ஹோப் ஹிக்ஸ்க்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டமையையடுத்து, டொனால்ட் ட்ரம்புக்கும், அவரது மனைவி மெலனியா ட்ரம்பும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அவர்களுக்கு கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்று உறுதிசெய்யப்பட்டமை குறிப்பிட்டத்தக்கது.

# கனடாவிலும் கொரோனா தொற்று அதிகரிக்கிறது!

கனடாவில் ஜுன் மாத ஆரம்பத்திற்கு பிறகு நாளொன்றுக்கான கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பெருந்தொற்று உயிரிழப்பு அதிகரித்துள்ளது.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றால் இரண்டாயிரத்து 124 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையோடு, 90 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜுன் 4 ஆம் திகதி 109 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டமைக்குப் பிறகு, தற்போதுதான் நாளொன்றுக்கான உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 26 ஆவது நாடாக விளங்கும் கனடாவில், இதுவரை ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 659 பேர் மொத்தமாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், மொத்தமாக 9 ஆயிரத்து 409 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 15 ஆயிரத்து 636 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 37ஆயிரத்து 614 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதில் 126 பேரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஜேர்மனியில் கொரோனா பாதிப்பு மூன்று லட்சத்தை கடந்துள்ளது!



ஜேர்மனியில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மூன்று லட்சத்தை கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, ஜேர்மனியில் இரண்டு லட்சத்து 98 ஆயிரத்து 363 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகளவில் கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 22 ஆவது நாடாக விளங்கும் ஜேர்மனியில், ஒன்பதாயிரத்து 596 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் இரண்டாயிரத்து 833 பேர் பாதிக்கப்பட்டமையோடு, 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை 29 ஆயிரத்து 267 பேர் வைரஸ் தொற்றுக்காக அங்குள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 373 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை இரண்டு லட்சத்து 59 ஆயிரத்து 500 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

# ஹெச் – 1 பி, ஹெச் 2 பி விசா நிறுத்தம் ட்ரம்ப் உத்தரவை நிராகரித்தது நீதிமன்றம்!



அமெரிக்காவில் வெளிநாட்டவர்கள் தங்கி பணிபுரிவதற்கு வழங்கப்படும் ஹெச் – 1பி, ஹெச் – 2பி நுழைவு இசைவு (விசா) அளிப்பதை நிறுத்தி வைத்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்த உத்தரவை நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

அமெரிக்காவில் வெளிநாட்டவர்கள் பணிபுரிவதற்கு ஹெச் – 1பி, ஹெச் – 2பி போன்ற நுழைவு இசைவுகள் வழங்கப்படுவதை தற்காலிகமாக நிறுத்தி ட்ரம்ப் கடந்த ஜுன் மாதம் உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு எதிராக கூகுள், மைக்ரோசாஃப்ட் உள்ளிட்ட நிறுவனங்கள் அங்கமாக உள்ள தொழிலக கூட்டமைப்புகள் வழக்கு தொடுத்தன.

இதனையடுத்து இந்த வழக்கை விசாரித்த வடக்கு கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றம், ஜனாதிபதி ட்ரம்ப்பின் உத்தரவை இரத்து செய்து உத்தரவிட்டது.

மேலும், அமெரிக்க நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட குடியேற்ற சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ள ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை எனவும் தெரிவித்தது. குடியேற்ற விதிகளை வகுக்க நாடாளுமன்றத்துக்கு மட்டுமே அதிகாரம் உள்ளதாகவும், இந்த விவகாரத்தில் ஜனாதிபதிட்ரம்ப் தனது அதிகார வரம்பை மீறி செயல்பட்டிருக்கிறார் எனவும் தெரிவித்தது.

அமெரிக்காவில் சுமார் 6 லட்சம் பேர் ஹெச் – 1பி நுழைவு இசைவு பெற்று பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 6 ஆயிரத்து 968 பேர் கொரோனாவால் பாதிப்பு!

பிரித்தானியாவில் கொரோனா வைரஸ் (கொவிட் – 19) பெருந்தொற்றால், கடந்த 24 மணித்தியாலத்தில் 6 ஆயிரத்து 968பேர் பாதிப்படைந்துள்ளமையோடு, 66 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகளவில் கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 12 ஆவது நாடாக விளங்கும் பிரித்தானியாவில், இதுவரை நான்கு லட்சத்து 67 ஆயிரத்து 146 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 42 ஆயிரத்து 268 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரித்தானியாவில் கொவிட் – 19 தொற்று மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில், பெரும்பாலான பகுதிகளில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வடகிழக்கு இங்கிலாந்தில் முடக்கநிலை கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

பப்கள் மற்றும் உணவகங்கள் போன்ற எந்தவோர் உட்புற அமைப்பிலும் மற்றும் வீடுகளுக்கு இடையில் மக்கள் கலப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொவிட் – 19 இற்கு நேர்மறையானதை சோதிக்கும் எவரும் அல்லது வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டனர் எனக் கூறப்பட்டால், அவர் சுய தனிமைப்படுத்தப்படல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசத்தின் கோரிக்கையை ஏற்றது அர்மீனியா அசர்பைஜானுடன் போர் நிறுத்தத்துக்கு இணக்கம்!

அசர்பைஜானுடன் போர்நிறுத்தத்தை எட்ட சர்வதேச மத்தியஸ்தர்களுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக அர்மீனியா தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய நாகோர்னோ – கராபாக் பிராந்தியத்தில் ஆறாவது நாளாகவும் கடுமையான மோதல்கள் இடம்பெற்றும் வரும் நிலையில், போர் நிறுத்த ஆட்சியை மீண்டும் ஸ்தாபிப்பதற்காக மோதலுக்கு ஓ.எஸ்.சி.இ குழுவின் மத்தியஸ்தர்களாக இருக்கும் பிரான்ஸ், ர;யா மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதாக அர்மீனியா வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிந்து சென்ற நர்கோர்னோ – கராபாக் பிராந்தியத்தில் உள்ள அர்மீனிய அதிகாரிகள், அர்மீனிய ஆதரவுத் துருப்புக்களிடையே மேலும் 54 இராணுவ உயிரிழப்புகளை உறுதிசெய்தமையை அடுத்து படையினரின் இறப்பு எண்ணிக்கை 158 ஆக அதிகரித்துள்ளது.

எனினும், அசர்பைஜான் எந்தவோர் இராணுவ



உயிரிழப்புகளையும் தெரிவிக்கவில்லை, ஆனால் அர்மீனிய ஜல் தாக்குதலில் 19 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அர்மீனியா – அசர்பைஜான் இடையே அமைதியை ஏற்படுத்த 1992 ஆம் ஆண்டு ஓ.எஸ்.சி.இ மின்ஸ்க் குழு என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தக் குழுவின் தலைமைகளாக அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன.

தற்போது அர்மீனிய – அசர்பைஜான் மோதல் அதிகரித்து வரும் நிலையில், இந்த அமைதிக்குழு போரை முடிவுக்குக்கொண்டுவர மேற்கொண்ட முயற்சிகளுக்கு முதல் வெற்றி கிடைத்துள்ளது.

அர்மீனியா, அசர்பைஜான் நாடுகளுக்கு இடையேயான எல்லையாகப் பிரிக்கும் பகுதியில் நகோர்னோ – கராபத் என்ற மாகாணம் அமைந்துள்ளது

அசர்பைஜானில் அமைந்திருந்த இந்த மாகாணத்தில் பெரும்பான்மையானோர் அர்மீனிய ஆதரவாளர்களே ஆவர். 1994 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே நடந்த போரில் இந்த மாகாணத்தின் பெரும் பகுதியை அர்மீனியா கைப்பற்றியது.

மேலும், இந்த நகோர்னோ – கராபத் மாகாணத்திற்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. அன்றிலிருந்து நகோர்னோ – கராபத் மாகாணத்தை மையமாகக்கொண்டு அர்மீனியா – அசர்பைஜான் நாடுகளுக்கு இடையே மோதல் நிலவி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# எட்டியாந்தோட்டையில் தீ விபத்து கடை, களஞ்சியசாலை நாசமாகின!

எட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் யட்டியாந்தோட்டை மீகாவெல்ல பகுதியில் அமைந்துள்ள கடையொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த திடீர் தீ விபத்தால் குறித்த கடையும், அதன் அருகில் இருந்த களஞ்சியசாலையும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை, இந்த விபத்தில் எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பிரதேச பொது மக்களும் அவிசாவளை மற்றும் சீத்தாவக்க ஆகிய பகுதிகளில் உள்ள தொழில்சாலைகளின் தீயணைப்புப் பிரிவினரும் ருவான்வெல்ல பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினரும் எட்டியாந்தோட்டை பொலிஸாரும் இணைந்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். எனினும் பொருள்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன. தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் மின் ஒழுக்கு காரணமாக தீ ஏற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தீ விபத்துக் கான காரணம்,



சேத விவரங்கள் தொடர்பாக எட்டியாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆளுநர் உத்தரவு கொடுத்தும் மசியாத வைத்தியசாலைகள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.03

வடக்கு மாகாணத்தில் உள்ள சகல வைத்திய சாலைகளிலும் நோயாளர்களிற்கு உரிய உரிமைகள், சலுகைகள் தொடர்பில் பகிரங்கமாகப்படுத்த வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் அதிரடி உத்தரவு பிறப்பித்து 3 மாதம் கடந்தும் அது நடைமுறைப்படுத்தப் படவில்லை எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் காணப்படும் பல குறைகளில் சில சூறையாடப்படும் சுகாதாரத் துறை என கட்டுரை வடிவில் 'காலைக்கதிர்' பத்திரிகையில் வெளிவந்த நிலையில் ஜூலை 07ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் மாகாண திணைக் களங்கள், அமைச்சுக்களின் உயரதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன்போது பத்திரிகை செய்தி தொடர்பிலும் பிரஸ்தாபிக்கும்போதே மேற்கண்டவாறு ஆளுநர் பணித்திருந்தார்.

"கடவுளிற்கு அடுத்த படியாக மக்கள் பார்ப்பது வைத்தியர்களை. அந்த வைத்தியர்கள் தமது உரிமைக்காக குரல்கொடுத்து தமக்கான சலுகைகளை கோரும் போது நோயாளர்களின் சலுகைகளிற்காகவும் குரல் கொடுக்க வேண்டும். அவர்களின் உரிமையும் நிலை நாட்டப்பட வேண்டும். அதனாலேயே இவ்வாறான அறிவித்தலை பகிரங்கப் படுத்த கோருகின்றேன்.

"இதேநேரம் வடக்கு மாகாணத்தின் இரு வைத்தியசாலைகளில் மருந்துப் பொருள்கள் களவாடப்பட்டமை தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டதற்கு அப்பால் உடன் விசாரணைகளையும் மேற்கொள்ளவும் வடக்கில் ஐவர் கொண்ட குழுவை நியமித்து சுகாதார நிலைமை தொடர்பில் அறிக்கையும் கோரினேன். அதன் நிலைமை என்ன?" என ஆளுநர் அக்கூட்டத்தில் கோரியிருந்தார்.

இவ்வாறு ஆளுநர் தெரிவித்து 3 மாதங்கள் கடந்தும் அவ்வாறு செயல்படாதமை தொடர்பில் மாகாண சுகாதாரபணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது -

சகல மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஊடாகவும் விடுதி வசதி கொண்ட வைத்திய சாலைகளிற்கு அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும் குறித்த விடயம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் ஒருமுறை பரிசோதிக்கப்படும். - எனப் பதிலளித்தார்.

# நீதிமன்ற சுயாதீனத்துக்கு 20 ஆல் பாதிப்பு வராது!

### அடித்துக் கூறுகிறார் அலிசப்ரி

கொழும்பு, ஒக்.03

20 ஆவது திருத்த சட்டத்தின் ஊடாக நீதிமன்ற சுயாதீனத் தன்மைக்கு எந்தப் பாதிப்பு ஏற்படாது என நீதியமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

20 ஆவது திருத்தம் மூலம் நீதிமன்ற சுயாதீன தன்மைக்கு ஒருபோதும் பாதிப்பு ஏற்படப்போவதில்லை.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் நீதிமன்றத்தில் எதிர்த்தரப்பினரால் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் 20 ஆவது திருத்தத்தில் நாடாளுமன்ற செயற்குழுவின் போது திருத்தங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் அமைச்சரவை, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் அனுமதியுடன் எனக்கு வழங்கப்பட்டிருந்தன.

அதனை நான் சட்டமா அதிபருக்கு வழங்கியி



ருந்தேன். அதனையே சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு முன்னிலைப்படுத்தியிருக்கின்றார்.

மேலும் சட்டமா அதிபரால் நீதிமன்றத்துக்கு முன்னிலைப்படுத்தியிருக்கும் திருத்தங்கள் தொடர்பில் அச்சப்படத்தேவையில்லை.

அதனை நாங்கள் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து செயற்குழுவின்போது, அந்தத் திருத்தங்களை மேற்கொள்வோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்

## கொரோனா தொற்றிலிருந்து 9 பேர் குணமடைந்தனர்!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 09 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு நேற்று (சனிக்கிழமை) தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 254 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்று உறுதியானவர்களில் 121 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு கொரோனா தொற்று சந்தேகத்தில் 37 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 3 ஆயிரத்து 388 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இறக்குமதிக் கட்டுப்பாட்டினால் யாழ். வர்த்தகர்களுக்குப் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.03

நாட்டில் தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொருள்களிற்கு இறக்குமதி தடை விதித்துள்ளமையினால் வர்த்தகர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர் என யாழ். வணிகர் கழக செயலாளர் க.சிவலோகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வணிகர்கள் வர்த்தகம் செய்யும் புடவை , பான்ஸிப் பொருள்கள் மற்றும் முக்கிய உணவுப் பொருள்கள் உட்பட பெரும்பாலான பொருள்கள் இவற்றில் அடக்கம். இதன் காரணமாக யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

இப்பாதிப்பின் காரணமாக ஊழியர் சம்பளம், கடை வாடகை, மின்சாரக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்தப் பெரும் பிரச்சினை எதிர் நோக்கப் படுகின்றது. இந்த வர்த்தகதுறையை மேம்படுத்த அரசு பல சலுகையை வழங்கினாலும் வர்த்தகதுறையை

## நியூ டயமன்ட் கப்பலை அகற்றுவதற்கு அனுமதி!



நியூ டயமன்ட் கப்பலை இலங்கை கடற்பரப்பில் இருந்து அகற்றுவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

கடற்படை ஊடகப்பேச்சாளர் இதுதொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு இந்தக் கப்பல் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணம் மற்றும் நட்டஈடு வழங்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கப்பலை அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது கப்பலை இலங்கை கடற்பரப்பில் இருந்து இழுத்துச் செல்லும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் கடற்படை ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கொரோனாக் காலத்தில் கொண்டுவரப்பட்டுள்ள 300 சொகுசு வாகனம் தொடர்பில் விசாரணை!

கொழும்பு, ஒக்.03

கொரோனா தொற்று காலப்பகுதியில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 300 அதிசொகுசு வாகனங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் பிஎம்டபிள்யூ, பென்ஸ் உள்ளிட்ட அதி சொகுசு வாகனங்கள் பல அடங்குகின்றன என சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் பின்னர் இந்த வாகனங்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றில் அதிகமான வாகனங்கள் அரச சேவையாளர்களுக்கும் தீர்வை வரி இன்றி நிறுவன அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்துவோருக்கும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களில் சில அரசாங்கத்தால் நிபந்தனைகள் விதிக்கப்படுவதற்கு முன்னர் விநியோகிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனையவை கடனுக்கான கடிதம் மற்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டதன் பின்னர் விநியோகிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அவ்வாறான வாகனங்கள் அரசுடைமையாக்கப்படக்கூடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2020 இல் வெளியிடப்பெற்றது.